வலயக்கல்விஅலுவலகம் - திருக்கோணமலை

நான்கு வருட நடுத்தரக்கால அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் - தரம் 2345(4Y-MTDP-G2345)
இன் கீழ் முன்னெடுக்கப்படும்
கொவிட்-19 காலமாற்று உபாயக்கல்விச் செயற்றிட்டம் - III (COVID- PASEP-III)

மாதிரிப் பரீட்சை 69 – 2023

வினாத்தாள் - I

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம்: 1மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ✱ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✱ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✱ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ✱ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- ✱ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவதுபரீட்சகர் முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் வழங்கிய மதிப்பிட்டு புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

[பக் 2ஐப் பார்க்க]

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "






Contact


76667-4945


தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன


- **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01.













1) 2) 3)

02.











1) 2) 3)



03. இங்கு  இன் பெறுமானம் யாது?

1) 1 2) 2 3) 3



04. இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 8 2) 10 3) 9

05. 20 இற்கு முன்னால் வரும் எண்ணையும் 40 இற்கு பின்னால் வரும் எண்ணையும் கூட்டி வரும் எண்ணானது பின்வரும் எந்த எண்ணிற்கு முன்னால் வரும்?

1) 60 2) 61 3) 59

06. நீலா ஒரு பெண்பிள்ளை அவளது அண்ணன் தனக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருப்பதாகக் கூறினான். எனின், நீலாவிற்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?

1) 3 2) 2 3) 4


07. பறவைகள் எல்லாம் பறக்கும் காகம் ஒரு பறவை எனின்,

1) சில காகங்கள் பறக்கும்.
2) காகங்கள் எல்லாம் பறக்கும்.
3) பறப்பன எல்லாம் காகங்கள்.

www.lkedu.lk

08.

முழு உருவின் பரப்பளவு அதில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு?



1) 3 மடங்கு
2) 6 மடங்கு
3) 4 மடங்கு

- **09ம் , 10ம் வினாக்களுக்கு கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.**

09. மேசை : மரம் அதுபோல அம்மி : .....

1) கருங்கல் 2) பாறாங்கல் 3) செங்கல்

10. மாம்பழம் : சதை அதுபோல பலாப்பழம் : .....

1) காய் 2) வித்து 3) சுளை

11. 1 – 20 வரையுள்ள இரட்டை எண்களை எழுதும் போது இலக்கம் 2 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

1) 3 2) 2 3) 10

- **12ம் , 13ம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள மூதுரையைக் கொண்டு விடை எழுதுக.**

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச்சிறகை விரித்து ஆடினால் போதுமே
கல்லாதான் கற்ற கவி

12. இம்மூதுரையில் ‘ **கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி** ’ என்பதன் கருத்து

1) மயில் பாட வான்கோழி ஆடுவது
2) காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி
3) தனது அழகான சிறகை விரித்து ஆடும் வான்கோழி

13. இக்கவிதையில் பிரதானமாகக் கூறப்படுவது,

1) மயில் ஆடுவது பற்றி
2) கல்வி கற்காதவன் சொல்லும் கவிதை பற்றி
3) வான்கோழி ஆடுவது பற்றி

www.ikeou.lk

14. நீங்கள் இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 2023 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம் என்பதைத் தெரிவு செய்க.
    1) இருபதாம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்
    2) இருபத்தோரம் நூற்றாண்டு மூன்றாம் தசாப்தம்
    3) இருபத்தோரம் நுற்றாண்டு இரண்டாம் தசாப்தம்

15. வாமனன் மாறனின் மகன் ஆவான். நிதினின் தந்தை வாமனன் ஆவான். இவர்களில் தந்தையாகவும் மகனாகவும் உள்ளவர்,
    1) வாமனன் 2) மாறன் 3) நிதின்

16. ஐந்து வினாக்கள் கேட்கப்பட்ட ஒரு வினாவிடைப் போட்டியில் முதலாம் வினாவிற்கு 10 புள்ளிகளும் இரண்டாம் வினாவிற்கு 8 புள்ளிகளும் மூன்றாம் வினாவிற்கு 6 புள்ளிகளும் நான்காம் வினாவிற்கு 4 புள்ளிகளும் ஐந்தாம் வினாவிற்கு 2 புள்ளிகளும் வழங்கப்பட்டன. மாணவன் ஒருவன் 24 புள்ளிகளைப் பெற்றான் எனின் அவன் சரியாக விடையளிக்காத வினா எது?
    1) மூன்றாவது வினா 2) நான்காவது வினா 3) ஐந்தாவது வினா

17. தொலைக்காட்சி என்பது இலக்கங்களைப் பயன்படுத்தி 123456 என எழுதப்பட்டால் தொலைபேசி என்பது எவ்வாறு எழுதப்படலாம்?
    1) 1246 2) 1256 3) 1276

18. இன்று உவா மாகாணத்தில் அதிக மழை பெய்யலாம் எனவும் வடமேல் மாகாணத்தில் அதிக வெப்பம் காணப்படலாம் எனவும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி அதிக வெப்பம் அதிக மழை காணப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ள இரு நகரங்கள் முறையே,
    1) யாழ்ப்பாணம் , பதுளை 2) புத்தளம் , மொனராகலை
    3)குருநாகல் , கேகாலை

19. மொத்த வியாபார நிலையமொன்றுக்கு மூன்று லொறிகளில் வந்து சேர்ந்த அரிசி மூட்டைகளின் மொத்த எண்ணிக்கை 165 ஆகும். இந்த அரிசி மூட்டைகள் அனைத்தும் 15 சில்லறைக் கடைகளுக்கு சம எண்ணிக்கையில் அனுப்பி வைக்கப்பட்டால் ஒரு சில்லறைக் கடைக்கு அனுப்பிவைக்கப்பட்ட அரிசி மூட்டைகளின் எண்ணிக்கை யாது?
    1) 11 2) 15 3) 13

www.ikedu.lk

- **A B C ஆகிய மூன்று மாமரங்களிலிருந்து பின்வரும் அடிப்படையில் மாம்பழங்கள் பறிக்கப்பட்டன. அத்தகவல்களைக் கொண்டு 39 , 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

➢ **மரம் A இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு மாம்பழங்கள் மரம் C இல் பறிக்கப்பட்டது.**

➢ **மரங்கள் A , B ஆகியவற்றில் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை மரம் C இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.**

➢ **மரம் C இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களில் 8 மாம்பழங்களை காவற்காரருக்கு வழங்கிய பின்னர் அதில் 40 மாம்பழங்கள் மீதியாகக் காணப்பட்டன.**

20. மரம் A இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

    1) 12 2) 24 3) 16

21. மூன்று மரங்களிலும் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

    1) 96 2) 72 3) 80

22. கொரோனா நோய் காரணமாகச் சந்தை பங்குனி மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 12 நாட்களுக்கு மூடப்பட்டது. அச்சந்தை மறுபடியும் திறக்கும் தினம்,

    1) பங்குனி 25ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
    2) பங்குனி 24ம் நாள் சனிக்கிழமை
    3) பங்குனி 26ம் நாள் திங்கட்கிழமை

23. ‘ உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? ’ என்ற பழமொழிக்கு ஒத்த பழமொழி,

    1) கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
    2) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
    3)கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

24. வியாபாரி ஒருவர் பற்பசைப்பெட்டி ஒன்றினை ரூபா. 128.00 இற்கு வாங்கி ரூபா. 145.00 இற்கு விற்பனை செய்வதால் ரூபா. 255.00 இனை இலாபமாகப் பெறுகின்றார். வியாபாரி விற்பனை செய்த பற்பசைப்பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

    1) 25 2) 15 3) 35

25. உமா , ரமா , பாமா ஆகிய மூன்று நண்பிகளினதும் தம்பிகள் மூவரும் ஆருரன் , தீசன் , யாதவ் ஆவர். தீசனும் பாமாவின் தம்பியும் சகபாடிகள் தீசன் உமாவின் தம்பி அல்ல எனின், ரமாவின் தம்பி யார்?

    1) ஆருரன் 2) தீசன் 3) யாதவ்

www.ikedu.lk


26. நாதனிடமிருந்த பணத்தொகையை விட அவளது தம்பியிடம் 75 ரூபா. குறைவாக இருந்தது. நாதன் 30 ரூபாவை தனது தம்பிக்குக் கொடுத்தால் நாதனது தம்பியிடமுள்ள பணத்தொகை நாதனிடமுள்ள பணத்தொகையிலும்,

1) இருபத்தைந்து ரூபாவினால் குறைந்தது.

2) பதினைந்து ரூபாவினால் குறைந்தது. 3) பதினைந்து ரூபாவினால் கூடியது.


- **27 , 28 ஆகிய வினாக்களில் எண் கோலங்களை அவதானித்து வினாக்குறி இடப்பட்ட இடங்களில் வரவேண்டிய எண்களைத் தெரிந்து கோடிடுக.**

27.




1) 56 2) 28 3) 32


28)



1) 48
2) 96
3) 24

- **தரப்பட்ட கோட்டுப்படத்தை பயன்படுத்தி விடையைத் தெரிந்து கோடிடுக.**





29. அப்பிள்கள் மூன்றினதும் மாம்பழங்கள் ஐந்தினதும் விலை யாது?

1) ரூபாய்.545.00 2) ரூபாய். 482.00 3) ரூபாய். 525.00

30. மாம்பழம் ஒன்றும் அப்பிள் ஒன்றும் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

1) ரூபாய் 125.00 2) ரூபாய். 135.00 3) ரூபாய். 130.00

www.ikedu.lk

31. ஒரு வட்ட மைதானத்தைச் சுற்றி 25 மின் கம்பங்கள் நடப்பட்டிருந்தன. இரண்டு கம்பங்களுக்கு இடையில் 3 மின்குமிழ்கள் பொருத்த தீர்மானிக்கப்பட்டதெனில் 25 கம்பங்களுக்கு இடையிலும் பொருத்த தேவையான மின்குமிழ்களின் எண்ணிக்கை,

1) 70 2) 28 3) 75

32. கமல் மல்லிகைப்பூவையும் ரோசாப்பூவையும் விரும்புகிறான். ராஜா ரோசாப்பூவையும் செவ்வந்திப்பூவையும் விரும்புகிறான். ரவி தாமரைப்பூவையும் சூரியகாந்திப்பூவையும் விரும்புகிறான். எனின், மூவரும் விரும்பும் பூக்களின் எண்ணிக்கை யாது?

1) 05 2) 06 3) 04


33. மீனா புத்தகம் ஒன்றில் 10ஆம் பக்கத்திலிருந்து 23ஆம் பக்கம் வரை வாசித்தாள். எனின், அவள் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?

1) 12 பக்கம் 2) 13 பக்கம் 3) 14 பக்கம்

34. தைமாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை எனின், 20ஆம் திகதி என்ன நாளாகும்?

1) வெள்ளி 2) புதன் 3) வியாழன்

35. பால்மா விற்பனைக் கடை ஒன்றில் காணப்பட்ட பால்மா பேணிகளின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் அருகே குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.



1)அங்கர் , மெலிபன் பால்மா பேணிகள் சம அளவில் காணப்படுகின்றன.

2) வீவா பால்மா பேணிகள் மற்றைய பால்மாக்களை விட அதிகமாக காணப்படுகின்றன.

3) அங்கர் பால்மா பேணிகள் மற்றைய பால்மாக்களை விட அதிகமாகக் காணப்படுகின்றன.

36. புகைத்தல் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை அறிந்திருக்கும் சிலர் தொடர்ந்தும் புகைப்பிடிப்பதற்கான காரணம் புகையிலைக்கு அடிமையான பழக்கத்தை கைவிடுதல் அவர்களுக்கு கடினமாக இருக்கின்றமையாகும். இதற்கு மிகப்பொருத்தமான காரணமாக அமைவது,

1)பரம்பரையான நாட்டம் காரணமாகச் சிலர் புகைக்கின்றனர்.

2) சிலருக்கு சில பழக்கங்களை மாற்றுவது இயலாது இருக்கின்றது.


3) இளமையிலிருந்து புகைப்பதால் தீங்கு ஏற்படாது

www.keou.lk

37. சரியான கோவையைத் தெரிவு செய்க.

1)999 + 99 + 9 = 1117 2) 888 + 88 + 8 = 984 3)777 + 77 + 7 = 871

38. கேசவன் சாந்தனிலும் உயரமானவன். மாறன் சாந்தனிலும் உயரமானவன். அகிலன் மாறனிலும் உயரமானவன் இவர்களுள் மிகவும் உயரம் குறைந்தவர் யார்?



1) மாறன் 2) உதயன் 3) சாந்தன்

39. அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் காணப்படுமாயின் இதற்குச் ★ சமனானதை தெரிவு செய்க.

1) ♦ ♦ ♦ 2) ♥ ♦ ♦ 3) ♥

40. பெட்டி ஒன்றில் 6 பச்சைநிற மாபிள்களும் 5 நீலநிற மாபிள்களும் 7 சிவப்பு நிற மாபிள்களும் உள்ளன. எழுமாற்றாக ஒரு மாபிளை எடுக்கும்போது அது நீலநிறமாக இருப்பதற்கு நீல நிறமாக இருப்பதற்கு குறைந்தபட்சம் எத்தனை மாபிள்கள் எடுக்க வேண்டும்?

1) 12 2) 14 3) 4



வலயக்கல்விஅலுவலகம் - திருக்கோணமலை

நான்குவருடநடுத்தரக்காலஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் - தரம்2345(4Y-MTDP-G2345)

இன் கீழ் முன்னெடுக்கப்படும்

கொவிட்-19 காலமாற்றுஉபாயக்கல்விச் செயற்றிட்டம் -III (COVID- PASEP-III)

மாதிரிப் பரீட்சை 69 – 2023

வினாத்தாள் - II

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம்: 1மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 46 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவதுபரீட்சகர் முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

[பக் 2ஐப் பார்க்க]

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் கல்வியிற் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக்காப்பது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களைக் கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

1) ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?

---

2) "கவனமாக" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக?

---

3) பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்று தருக?

---

4) "சிறுமை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

---

5) "நூல்கள்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

---

6) தன்மை, பன்மை, எதிர்கால வினைச்சொல்லை எழுதுக.

---

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

I. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது .....(அரிய, அறிய) காரியம் ஆகும்.

II. சிகிரியா ஓவியங்கள் ..... (தணிச்சிறப்பு, தனிச்சிறப்பு) வாய்ந்த பழைமையான ஓவியங்களாகும்.

03. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் / பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் (X) எனவும் அடைப்பிற்குள் அடையாளம் இடுக.

1) வானில் பறவைகள் அழகாகப் பறந்து சென்றன. ( )

2) மழைத்துளியும் சூரிய ஒளியும் வானவில் தோன்றுவதற்கு அவசியமாகின்றன. ( )

3) அங்கிருந்த ஒவ்வொரு பழமும் சுவையானது. ( )

4) எறும்புகள் தேவையான உணவுகளைச் சேகரித்து வைத்தது. ( )

04. I) புறா குறுகுறுக்கும் என்பதுபோல மயில் ----------

II) நரி ஊளையிடும் என்பது போல சிங்கம் ----------

05. பின்வரும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக எழுதுக.

I. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவின.

II. குயில்கள் கூவின.

---

www.ikeau.lk

06. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதிப் பழமொழியைப் பூரணப்படுத்துக.

I. ---------- போனாலும் சிறக்கப்போ

II. முற்பகல் செய்யிற் ----------

07. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

I. கடவுள் இல்லை என வாதிடுபவன் ----------

II. முனிவர்கள் வசிக்கும் இடம் ----------

08. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.

I. தாளம் போடுதல் ----------

II. தட்டிக் கொடுத்தல் ----------

09. பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

I. குன்று ----------

II. குப்பை ----------

10. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.

I. மெய் வாய் கண் மூக்கு செவி என்பன ஐம்பொறிகளாகும்

II. எவ்வளவு பெரிய சிலை

11. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.
பொழுதை / இசைத்துக் / பறவைகள் / காலைப் / வரவேற்றன / கானம்

---

12. தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. Rainbow ---------- Market ----------

13. தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக?
like / ice – cream / I

---

14. 'வெசிக்கிலிய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

---

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
'உள்ளே வரலாமா?'

- பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

16. 'நாற்பதாயிரத்து ஐந்நூற்றொன்பது' என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

---


17. 35099 என்பதனை விரித்து எழுதுக.

---------- + ---------- + ---------- + ---------- + ----------

www.ikeau.lk

18. XV இவ்வெண்ணுக்கு முன் பின் எண்ணை எழுதுக.

---------- XV ----------

19. 

இவ்வுருவில் மேலும் இரண்டு துண்டுகளுக்கு நிழற்றப்பட்டால் நிழற்றப்படாத உருவானது முழு உருவின் என்ன பின்னம்?

20. உச்சிகளினதும் முகங்களினதும் எண்ணிக்கை சமமாக உள்ள திண்ம உருக்கள் இரண்டு தருக.

---------- ----------

21. 0.8, 5/10, 0.6, 4/10 இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்துக?

---

22. 918 பழங்களைக் கொண்ட மாம்பழக்குவியலில் 2/3 பங்கு விற்கப்பட்டது. மீதியாக இருந்த பழங்களை மூன்று நண்பர்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.
    1) குவியலில் இருந்து விற்கப்பட்ட மாம்பழங்கள் எத்தனை?


    ---

    2) ஒரு நண்பனுக்கு கிடைத்த மாம்பழங்கள் எத்தனை?

    ---

23. ஒரு குழுவில் 6 பிள்ளைகள் வீதம் 23 குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

    ---

24. 

இங்கு ABCD எனப் பெயரிடப்பட்டுள்ள 5 வடிவங்கள் தரப்பட்டுள்ளன இவ்வுருக்களில் வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கைக்கேற்ப உருக்களை ஆங்கில எழுத்துக்களின்படி ஏறுவரிசைப்படுத்துக.

---


25. பி.ப 3.20இற்கு படிக்கத்தொடங்கிய கரன் 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களின் பின்னர் படிப்பை நிறுத்தினான். எனின் அவன் நிறுத்திய நேரம் யாது?

---

26. கமலனின் நிறை 52kg 150g ஆகும். ஆதியின் நிறை 39kg 500g ஆகும். எனின் ஆதியை விட கமலன் எவ்வளவு நிறையால் கூடியவன்?

---


www.ikdu.lk

27.  இவ் உருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை எத்தனை?

---

28. தென் மேற்கிற்கு எதிர்த் திசை எது?

---

29. 

1) நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?

---

2) நெல்லியடியிலிருந்து புத்தூர் வரையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?

- 30 முதல் 59 வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

30. நடக்கும் போது நிலத்தில் முதலில்படும் பாதத்தின் பகுதி
1) விரல் 2) குதிகால் 3) பெருவிரல்

31. உடலுக்கு சக்தி தரும் உணவு,
1) இறைச்சி 2) கரட் 3)ஈரப்பலக்காய்

32. காற்றினால் பரம்பலடையும் வித்து
1) எருக்கலை 2) மரமுந்திரிகை 3) துத்திரிப்புல்

33. மூலவர்ணங்களை சமஅளவில் கலப்பதால் உண்டாகும் நிறம்
1) நீலம் 2) சிவப்பு 3) கபிலம்

34. தீங்கான பிராணிகளை அழிக்கும் பிராணி எது?
1) கவரக்கொய்யா 2) பாம்பு 3) ஓணான்

35. நாகமரப்பூங்கா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2)அநுராதாபுரம் 3)மாத்தளை

36. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையிலுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை
1) 12 2) 9 3) 13

37. தற்போது பதிவுத்தபால்க் கட்டணம் யாது?
1) ரூபாய் 50 2) ரூபாய் 110 3) ரூபாய் 45

38. இலங்கையில் பெருந்தெருக்களை அமைத்த மன்னனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட கோபுரம் எது?
1) தாமரைத்தடாகம் 2) கப்ரன்டோசன் 3)தலாத மாளிகை

39. ஊவா வெல்லஸ்ஸைக் கலகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டவர்
1) கொங்காலே கொட பண்டா
2) கெப்பெட்டிப் பொல திசாவ
3) வீரபுரன் அப்பு

www.lkedu.lk

40. "விடிவெள்ளி நம் விளக்கு ஐலசா
விரிகடலே பள்ளிக் கூடம் ஐலசா" என்று தொடங்கும் இப்பாடல்
1) உழவர்பாடல் 2) மீனவர் பாடல் 3) அரிவி வெட்டும்பாடல்

41. 

இக்குறியீடு குறிப்பது

1) வயது வந்தவர்களுக்காக என்பது
2) கர்ப்பிணித் தாய்மார்களுக்காக என்பது
3) வலது குறைந்தவர்களுக்காக

42. இலங்கையில் 3 மாவட்டங்களை உள்ளடக்கிய எத்தனை மாகாணங்கள் உள்ளன.

1) 5 2) 3 3) 4

43. விற்றமின் E குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
1) பெரிபெரிநோய் 2) மலட்டுத்தன்மை 3) குருதிஉறையாநோய்


44. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை இணைக்கும் இரு நகரங்களும் எவை?
1) கொழும்பு – கண்டி 2) கண்டி – யாழ்ப்பாணம் 3) கொழும்பு – காலி

45. சரணாலயங்களைக் குறிக்கப் பயன்படும் நியம நிறம்
1) கபிலம் 2) பச்சை 3) மஞ்சள்

46. நில்வளகங்கை கடலுடன் கலக்கும் இடம்
1) மாத்தறை 2) மாத்தளை 3)களுத்துறை

47. தரமான பற்பசைக்கு வழங்கப்படும் தரச்சான்று
1) SLS 2) SLDA 3) ISO

48. மூன்று இதழ் பூக்களைக் கொண்ட தாவரங்களில் ஒன்று
1) அந்தூரியம் 2) நித்தியகல்யாணி 3) தென்னை

49. 

இவ்வாறு இரு காந்தங்களையும் அருகருகே கொண்டு சென்றால் யாது நிகழும்

1) கவரும் 2) தள்ளும் 3) ஒட்டும்

50. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதி
1) கலப்பை, குல்லம், நுகத்தடி
2) சீவுளி, நுகத்தடி, ஏர்
3) கலப்பை, துருத்தி, சீவுளி

51. காற்றினால் இயங்கும் இசைக்கருவிகளில் ஒன்று
1) பறை 2) தவில் 3) கொம்பு

52. இலங்கைத் தேசிய விளையாட்டில் ஓர்அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
1) 6 2) 7 3) 5

53. சீனி தயாரிக்கப் பயன்படும் தாவரங்கள்
1) பீற்றூட், கரட் 2) பீற்றூட்,கரும்பு 3) கரும்பு, கரட்

www.ikedu.lk

54. நன்னடத்தை சான்றிதழ் வழங்குபவர்
1) ஆசிரியர் 2) முகாமையாளர் 3) கிராமசேவையாளர்

55. 'இதய ஒலியைச் செவிமடுங்கள்' இவ்வாக்கியம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படி நிலை
1) முதலாவது 2) இரண்டாவது 3) ஐந்தாவது

56. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது.
1) உடலை நன்கு போர்த்துதல்.
2) குளிர் நீர் பருகக் கொடுத்தல்.
3) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்.

57. மின்னைக் கடத்தும் பொருள்
1) கண்ணாடி 2) ஈயத்தாள் 3) இறப்பர்

58. கீரை வகைகளை நீரில் நன்றாக அலசிக்கழுவும் போது அந்நீருடன் சேர்க்கப்படதக்க மிகப் பொருத்தமான பொருள்
1) குளோரின் 2) எலுமிச்சம்புளி 3) உப்பு

59. 
உருவில் காட்டப்பட்டுள்ள கிராமிய விளையாட்டு எது?

1) சடுகுடு
2) பசுவும் புலியும்
3) கிட்டிப்புள்

60. மனிதன் தமது தேவைகளுக்காக இயற்கையாக இருக்கின்ற காடுகளைஅழித்து தமது தேவையை பூர்த்தி செய்கிறான். இவ்வாறு காடுகளை அழிப்பதால் இவ் உலகம் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாது. எழுவாய், பயனிலை சரியானதாக இருத்தல் வேண்டும்.

I. .....
.....

II. .....
.....

III. .....
.....

www.lkedu.lk